நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
II கூடுதல் அமர்வு நீதிமன்றம், ஈரோடு.
**S.C.No. 89/2024**

அ.சா.5 (LW – 6 ) சாட்சியின் சான்றுரை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகன் | த/பெ. | : | தங்கநாடார் |
| கிராமம் | : | கன்னியாகுமாரி | வட்டம் | : | கன்னியாகுமரி |
| தொழில் | : | பணி ஓய்வு | வயது | : | 62 |

20–02–2026 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.

2ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 2ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

முதல் விசாரணை (சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டார்).

நான் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 2016ம் வருடம் ஈரோடு இருப்புபாதை காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக நான் பணியில் இருந்தபோது 26–03–2016ம் தேதியில் கேரளா மாநிலம், எர்ணாகுளம் இருப்புபாதை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து திருவணந்தபுரம் காவல் கண்காணிப்பாளர் மூலமாக சென்னை இருப்புபாதை காவல் கண்காணிப்பாளர் வழியாக கோவை இருப்புபாதை துணை காவல் கண்காணிப்பாளர் வழியாக ஈரோடு இருப்புபாதை காவல் நிலையத்திற்கு வந்த வழக்கு கோப்பை நான் பெற்றேன். சம்பவ இட ஆளுகை பேரில் ஈரோடு இருப்புபாதை காவல் நிலைய குற்ற எண்.91/2016ல் இதச பிரிவுகள் 328, 379ன் கீழ் நான் வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் நகல் **அ.சா.ஆ.3** ஆகும். அசல் முதல் தகவல் அறிக்கை ஸ்பிலிட்டப் வழக்கில் உள்ளது. அசல் முதல் தகவல் அறிக்கையை நான் சம்பந்தப்பட்ட நீதித்துறை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். புகார்தாரரான தாமஸை தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது அவர் சொந்தவேலையின் காரணமாக வெளியூரில் இருப்பதாகவும், வேலை முடிந்த பிறகு வருவதாக தெரிவித்தார். கேரளா மாநிலம், எர்ணாகுளம் இருப்புபாதை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர்கள் வர்கீஸ் மற்றும் மோகன்தாஸ் ஆகியோர்களை விசாரித்தேன். தொடர் புலன் விசாரணைக்கு வழக்கு கோப்பை ஆய்வாளர் வசம் சமர்பித்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

V SURESH
Digitally signed by V SURESH
Date: 2026.02.20 18:19:22 +0530

<u>2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடந்தது 16526 எண் கொண்ட இரயில் ஆகும். 16525 என்ற இரயிலில் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரிதான். எனக்கு மலையாளம் தெரியாது என்றால் எனக்கு மலையாள மொழியில் பேச தெரியும், மலையாள மொழியில் பேசுவதை புரிந்து கொள்ள முடியும், ஆனால் மலையாள மொழியில் எழுதபடிக்க தெரியாது. வழக்கு கோப்புகள் மலையாளத்தில் இருந்தது என்றால் இல்லை, ஆங்கிலத்தில் இருந்தது. முதல் தகவல் அறிக்கையில் ஒரு நபரை தான் எதிரியாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். கேரளாவில் இருந்து வந்த வழக்கு கோப்பின் அடிப்படையில் தான் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். கேரளாவில் புகார்தாரர் புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியாது என்றால் கேரளாவில் புகார்தாரர் மருத்துவனையில் வைத்து புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளார். வழக்கு கோப்பு பெய்யானது என்றால் தவறு. பொய்யான வழக்கு கோப்பின் அடிப்படையில் நான் தவறாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் தவறு.

<u>அரசு தரப்பு மறு விசாரணை</u> – இல்லை.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

V SURESH
Digitally signed by V SURESH
Date: 2026.02.20 18:19:28 +0530

II Addl. Sessions Judge, Erode.